மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.13/2023</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 23ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூங்கோதை | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>23.02.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் பாட்டனார் பெயர் வையாபுரி கவுண்டர் என்றால் சரிதான். எனது பாட்டனார் வையாபுரி கவுண்டர் என்பவருக்கு சுப்பைய கவுண்டர் என்கிற சுப்பராய கவுண்டர் மற்றும் சின்ன கவுண்டர் என்கிற சின்னப்ப கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி சுப்பிராய கவுண்டர் என்பவருக்கு நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியவர்கள் வாரிசுகள் என்றால் சரிதான் மேற்படி பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு வையாபுரி கவுண்டர் மற்றும் 4ம் வாதியில் தகப்பனார் பெரியசாமி கவுண்டர் 5ம் வாதியின் தகப்பனார் பொன்னுசாமி கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. அதைப் பொறுத்து நாங்கள்ஆவணங்கள் ஏதேனும் என்றால் இல்லை. வையாபுரி கவுண்டர் என்பவருக்கு 1 முதல் 3 வாதிகள்

மட்டும் தான் வாரிசுகள் என்பதற்கு நாங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெரியசாமி கவுண்டர் என்பவரின் வாரிசு தான் 4 ஆம் வாதி என்பதற்கு எங்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் பொன்னுசாமி கவுண்டர் என்பவருக்கு 5 மற்றும் 6 வாதிகள் தான் வாரிசுகள் என்பதற்கு நாங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

3. நாச்சிமுத்து கவுண்டர் என்பவருக்கு 7ம் வாதி மட்டும் தான் வாரிசு என்பதற்கு எங்கள் தரப்பில் நாங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெரியசாமி கவுண்டர் தாவா சொத்துக்களை பொறுத்து 4ம் வாதி பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளதாக நாங்கள் சொல்லியுள்ளதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4ம் வாதியின் தகப்பனார் பெரியசாமி கவுண்டர் என்பவர் நாளது தேதி வரை உயிருடன் தான் உள்ளார் என்றால் ஆமாம். ஐந்து மற்றும் ஆறு வாதிகளின் தகப்பனாரான பொன்னுசாமி கவுண்டர் என்பவரும் நாளது தேதி வரை உயிருடன் தான் உள்ளார் என்றால் ஆமாம்பொன்னுசாமி கவுண்டர் என்பவர் 5 மற்றும் 6 வாதிகள் பெயரில் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதாக நாங்கள் சொல்லியுடன் நிலையில் அதை பொறுத்து ஆவணங்கள் எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. எனது தாத்தா பெயர் சின்னப்ப கவுண்டர் என்கிற சின்னா கவுண்டர் என்றால் சரிதான். மேற்படியாருக்கு நாச்சிமுத்து கவுண்டர் கருப்பண கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியவர்கள் வாரிசுகள்

என்றால் சரிதான். மேற்படி பழனிச்சாமி கவுண்டர் என்பவரின் மகன் பெயர் பொன்னுச்சாமி என்றால் சரிதான். மேற்படி பொன்னுசாமி என்பவரின் மகன் தான் இந்த வழக்கின் பிரதிவாதி மயில்சாமி என்றால் சரிதான். பிரதிவாதியின் உடன் பிறந்த சகோதரி பெயர் லீலாவதி என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் சுப்புராயன் என்கிற சுப்புராய கவுண்டர் என்றால் இல்லை சுப்பிரமணி. எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என்றால் சரிதான்.

5. மேற்படி எனது பாட்டனார் நாச்சிமுத்து கவுண்டர் என்பவருக்கு 8 முதல் 11 பிரதிவாதிகள் மட்டும் தான் வாரிசுகள் என்பதை காண்பிக்க நாங்கள் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனது தாத்தா சின்னப்ப கவுண்டர் என்கிற சின்னா கவுண்டர் மற்றும் சுப்பராய கவுண்டர் என்பவரின் மகன்களான பழனிச்சாமி கவுண்டர் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்கள் கடந்த 05.06.1919 ஆம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் ஆமாம்.

6. சின்னப்ப கவுண்டர் இன் மகன்களான பழனிச்சாமி கவுண்டர், கருப்பன கவுண்டர்எனது தகப்பனார் சுப்பிரமணி ஆகியோர்கள் 02.03.1959 ஆம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் நாங்கள் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தின் படி கருப்பண கவுண்டர் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை மேற்படியார் பிரதிவாதியின் தாத்தாவான பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் 20.04.1964

இல் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் பிரதிவாதி அவரது சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

7. மேற்படி 1959 மற்றும் 1964 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை மற்றும் கிரைய ஆவணங்களில் கண்டுள்ள பொது காலியிடம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதி அவரது சகோதரி லீலாவதி என்பவரிடமிருந்து 06.12.2019 தேதியில் ஒரு பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதி பெற்றார் என்றால் சரிதான் தாவா 1வது ஐட்ட சொத்தின் ரீ சர்வே எண் 579/6 என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி பூமியின் விஸ்தீரனத்தை குறித்து வழக்குரை சொத்து விபரத்தில் நாங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம் மேற்படி 1959 பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா 1வது அயிட்ட சொத்தான ரிசர்வே எண் 579/6 பூமியில் மூன்று சென்ட் நிலமானது பிரதிவாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அது தவறாக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் பாகம் ஒதுக்கப்பட்டுள்ள விவரங்கள் தவறானது என்று நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் ஆமாம் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதியின் தாத்தாவிற்கு பாகம் ஒதுக்கப்பட்ட 3 சென்ட் நிலத்திற்கு தென்புறத்தில் தான் கருப்பராயன் கோவில் 2 சென்ட் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது என்றால் ஆமாம். கோவில் இடம் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பொதுவில் பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் ஐந்து சென்ட்

என்றும் மேற்படி சொத்தின் விஸ்தீரனத்தை குறிப்பிட்டால் அது எங்கள் வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் தான் வழக்குரை சொத்து விபரத்தில் விஸ்தீரணம் குறித்து நாங்கள் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. அதனால் தான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 3 சென்ட் விஸ்தீரன பூமியிலும் நாங்கள் கோவில் கட்ட முயற்சிகள் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா இரண்டாவது ஐட்ட சொத்தின் ரிசர்வே எண்.579/4 மற்றும் 5 என்றால் சரிதான். ரீ.ச.எண்.579/4 பூமியின் 2.50 சென்ட் என்றால் இருக்கலாம். மேற்படி 2.50 சென்ட் விஸ்தீரண இடம் உள்ள பூமியை பொறுத்து 1959 பாகப்பிரிவினையில் கருப்பண்ண கவுண்டர் என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு அவர் பிரதிவாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் பொது இடத்தை பொறுத்து அதில் எதுவும் எழுதவில்லை. வழக்கிற்காக மேற்படி ஆவணத்தில் பொது இடத்தை பொறுத்து எழுதவில்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10. ரீ.ச.எண்.579/4 பூமியை பொறுத்து பட்டாவானது பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் அவர் தவறுதலாக அவர் பெயரில் பட்டா வாங்கிக் கொண்டார். மேற்படி பட்டா ஆவணங்கள் 30 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். பட்டாவின் அடிப்படையில் பிரதிவாதி தாவா சொத்தில் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளதால் தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை பொது சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறோம். எனது தாயார் பெயர் பழனியம்மாள் என்றால் ஆமாம். புல எண்.579/5

பூமியை பொறுத்து எனது தாயார் பழனியம்மாள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது ஆனால் அது தவறுதலாக உள்ளது. என் தாயார் பெயரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுள்ளதாக நாங்கள் இதுவரை அதை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இதுவரை எடுக்கவில்லை தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்த பட்டாவை பொறுத்து நாங்கள் இதுவரை வருவாய் துறை அலுவலகத்தில் ஆட்சேபனைகள் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களின் சுவாதீனத்தை கேட்டு தான் நாங்கள் இந்த வழக்கை போட்டு உள்ளோம் என்றால் பொது சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறோம் அவர் அந்த சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறார் அதனால் இந்த வழக்கை போட்டுள்ளோம். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொருத்த பட்டாவில் எனது பெயர் இல்லை என்றால் ஆமாம். 100 வருடங்களுக்கு முன்புஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டுதான் நாங்கள் இந்த வழக்கை போட்டு உள்ளோம் என்றால் ஆமாம்.

12. தாவா சொத்தின் சுவாதீனத்தில் யார் இருந்து வருகிறார் என்பதை பொறுத்து வருவாய் துறை ஆவணங்களை வைத்து தான் முடிவு செய்ய முடியும் என்றால் ஆமாம். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொருத்த வருவாய் துறை ஆவணங்களில் எனது பெயரையும் சேர்க்க நான் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆமாம்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.23 18:55:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்